## பல முனைப் போட்டிகள் இருக்கலாம்; ஆனால்

# பலம் பொருந்திய போட்டியாக இல்லை!

## CNN - NEWS 18 - தொலைக்காட்சி நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

சென்னை, பிப். 25-

**சென்னையில் CNN - NEWS 18 தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டியில் "பலமுனை போட்டிகள் இருக்கலாம்; ஆனால் பலம் பொருந்திய போட்டியாக இல்லை" என்று கூறினார்.**

CNN NEWS 18 சார்பில் நடைபெற்ற "TOWN HALL CHENNAI" நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-

**கேள்வி** - இந்தத் தேர்தல் திராவிட மாடல் Vs North Indian Model என்று சொன்னீர்கள். அதைப்பற்றி சொல்லுங்கள்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - என்னுடைய பேச்சில் நான் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். மதச்சார்பின்மை, சோஷியலிசம், பாசிசத்தை எதிர்க்க வேண்டும். இதுதான் திராவிட மாடல். எல்லார்க்கும் எல்லாம் என்ற கொள்கையை வழிவகுத்துக் கொண்டு எங்களுடைய திட்டங்களை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம்.

**கேள்வி** - பா.ஜ.க. அந்த மாடலை பின்பற்றவில்லை என்று சொல்கிறீர்கள். அவர்களுடைய கூட்டணி கூட திராவிட மாடலைத் தான் பின்பற்றுவதாகச் சொல்கிறார்கள்.

**மு.க.ஸ்டாலின்** – நிச்சயமாக இல்லை. உறுதியாகச் சொல்கிறேன். பயன்படுத்திக் கொள்கிறார்கள். அவ்வளவுதான். அதைப் பயன்படுத்திக்கொண்டு போர்வையைப் போர்த்திக்கொண்டு உள்ளுக்குள் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்து கொண்டிருக்கிறார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.2.2026) சென்னையில் நடைபெற்ற CNN – NEWS 18 தொலைக்காட்சி நிறுவனத்தின் "டவுன் ஹால் சென்னை" நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அந்நிறுவனத்தின் நிர்வாக ஆசிரியர் ஜக்கா ஜேக்கப் மற்றும் மூத்த ஆசிரியர் கார்த்திகை செல்வன் ஆகியோருக்கு பேட்டியளித்தார்.

**கேள்வி** - இப்போது பலமுனைப் போட்டிக் களத்தில் இருக்கிறது என்கிறார்கள். நீங்கள் பலமுனைப் போட்டிகளாகப் பார்க்கிறீர்களா? அப்படி வந்தால் அதில் உங்களுக்கு சாதகமா? பாதகமா? அதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

**மு.க.ஸ்டாலின்**–நிச்சயமாக பல முனைப் போட்டிகள் இருக்கலாம். ஆனால், பலம் பொருந்திய போட்டியாக இல்லை.

### பிரதமர் - அமித்ஷா அடிக்கடி வரவேண்டும்!

**கேள்வி** - பிரதமர் 3 முறை இந்த மாதம் வரப் போகிறார்கள். பா.ஜ.க. தமிழ்நாட்டில் மிகவும் தீவிரமாக இருக்கிறது. அந்தக் கூட்டணியை வெற்றிப் பெற வைக்க வேண்டும் என்று நினைக்கிறது? அதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

**மு.க.ஸ்டாலின்**– நான் அடிக்கடி சொல்கிறேன். பிரதமர் அடிக்கடி வர வேண்டும். அமித்ஷாவும் அடிக்கடி வர வேண்டும். இந்தக் கவர்னரை மாற்றக் கூடாது. இதுவே எங்களுக்குப் பெரிய பிரச்சாரம்.

**கேள்வி** - தற்போது 5 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். கிட்டத்தட்ட Surgical Strike என்று தி.மு.க.வில் அனைவரும் சொல்கிறார்கள். மக்கள் மத்தியிலும் பேசுப் பொருளாக இருக்கிறது. அது உங்களின் கடமையாக நினைக்கி றீர்களா? அல்லது இந்தத் தேர்தலுக்கான ஒரு Game Changer ஆக உள்ளதா?

**மு.க.ஸ்டாலின்**–இதற்கு தொடக்கத்திலேயே விளக்கம் கொடுத்தேன். அதை என்றைக்கு தொடங்கினோமோ அன்று காலையிலேயே தொலைக்காட்சி யில் நான் பேசியிருக்கிறேன். அதுதான் விளக்கம். இதற்கு மேல் விளக்கம் சொல்ல அவசியம் இல்லை. தொடர்ந்து நாங்கள் அதைத்தான் சொல்லிக் கொண்டி ருக்கிறோம்.

### என்னுடைய உயரம் எனக்குத் தெரியும்!

**கேள்வி**- மணிசங்கர் அய்யர் அவர்களும் இருக்கிறார்கள். இன்னும் நிறைய பேர் அரங்கத்திற்கு வந்திருப்பதை பார்க்கிறோம். இன்றைய நிகழ்வில் இருக்கிறார். அவர் உட்பட உத்தவ் தாக்கரே என்று இன்னும் பலரும் சொல்கிறார்கள். 'இந்தியா' கூட்டணிக்கு நீங்கள் தலைமைத் தாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு வாய்ப்பு வந்தால் நீங்கள் ஏற்பீர்களா?

**மு.க.ஸ்டாலின்**– தலைவர் ஒருமுறை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். என்னுடைய உயரம் எனக்குத் தெரியும். அந்த உயரத்தின் அடிப்படையில் நான் இருப்பேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

## சட்டமன்றத் தேர்தல் :

# 4வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் குவிந்தனர்!

சென்னை, பிப். 25-

சட்டசபை தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது. நான்காவது நாளாக நேற்று முன்தினம் (23.2.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களை பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

நேற்று முன்தினம் (23.2.2026) 4வது நாளாக அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை கழக துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன் ஆகியோர் பெற்றனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.





தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து திரண்டு விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

# வரம்...



அறிவுச்
செறிவூட்டும்
அண்ணா
கலைஞர்
பெரியார்
காமராஜர் பெயர்களிலான
பிரமாண்ட
நூலகங்கள்..

அயல்நாடு
சென்று
ஆற்றல் பெருக்கும்
அரசுப்பள்ளி
மாணவர்கள்...

சென்னை
மதுரையை
தொடர்ந்து

திருச்சி
கோவை
திருப்பூர்
ராசிபுரம்
தூத்துக்குடி
காரைக்குடி என

தொட்டுத் தொடரும்
டைடல் பார்க்
கணினிப் பூங்காக்கள்..

விடியல்
பயணங்கள்

குளுகுளு
பேருந்துகள்

அவற்றுக்கு

சென்னை
கிளாம்பாக்கம்

திருச்சி
பஞ்சப்பூர் என

உலகத்
தரத்திலான
ஏராள பேருந்து
நிலையங்கள்..

கபடி கால்பந்து
முதல்

உலகை
விழி
விரிய வைக்கும்
வகையில்
ஊக்கப்படுத்தும்
விளையாட்டுத் துறை

அதி
விஞ்ஞானத்துடன்
கிண்டி
கொளத்தூர்
பெரும்பாக்கம்
தாம்பரம்
என

தலைநகர்
சென்னை
தொடங்கி

தமிழகம்
எங்கும்

நவீன
அரசு மருத்துவ மனைகள்...

தேன்தமிழ்

அறப்
பணிகள்

தெய்வீகத்
திருப்பணிகள்
என

நாலாயிரம்
கோவில்ளுக்கு
நடத்தப்பட்ட
குடமுழுக்குகள்.

தொன்மைத் தமிழினத்தின்
நாகரிகத்
தொட்டில்

எங்கள்
அன்னைத்
தமிழகம்
என்பதை
ஆதாரப் படுத்தும்

கீழடி பொருநை
அகழாய்வு
அருங்
காட்சியங்கள்..

மகளிர்
உரிமைத்
தொகை

நான்
முதல்வன்

புதுமைப்
பெண்

தாயுமானவர்

இல்லம்
தேடி கல்வி

மக்களைத்
தேடி
மருத்துவம்
என

இன்னும்
இன்னுமாக

இன்னபிற
மாநிலங்களும்
பின்பற்றும்

மகோன்னத
மக்கள் நலத்
திட்டங்கள்
புல்லோடும்
பூக்களோடும்

புறநானூற்றுத்
தமிழையும்

சேர்த்தே வளர்க்கும்

செம்மொழி
தொல்காப்பியப்
பூங்காக்கள்...

இப்படி

கல்வி சுகாதாரம்
உட்கட்டமைப்பு
பொருளாதாரம்

தொழில்வளர்ச்சி
சமுகநலம்
சட்டம் ஒழுங்கு என

சகலத்திலும்
பெருமிதங்களால்
தோரணம் கட்டி

தாய்நாட்டின்
வளர்ச்சியைவிட
இரட்டிப்பு
வளர்ச்சியோடு

தமிழகத்தை
முக்கடல் சூழ்ந்த பாரதத்தின்
முதன்மை மாநிலாக

ஓய்வின்றி
உழைத்து

உச்சத்தில்
அமர்த்தி

இமைக்குள்
இருத்தி

இன்பத் தமிழுலகு காக்கும்

நம் தகப்பஞ்சாமியாம்

முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலின்

வளர்தமிழ்
பூமிக்கு வாய்த்த
வரம் அல்லவா..

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தி தொடர்பு குழு
துணைத் தலைவர்